## ஜனவரி - 29

**"கர்த்தருக்கு பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்"**

**- சங் 111:10.**

சிருஷ்டிகருக்கு முன்பு ஒரு சிருஷ்டி கடைபிடிக்க வேண்டிய ஒரே முறையும் தகுந்த முறையும் இந்த ஒன்று தான். ஏனெனில், சிருஷ்டிகர் தான் நாம் உருவாவதற்கு முதற்காரணர். அவரே நம்மை சிருஷ்டித்தார். காத்தும் வருகிறார். எல்லா அண்ட சராசரங்களுக்கும் தேவனாக இருக்கிறார். எனவே அவர் பேசுகையில் நமது காதுகள் அவருடைய சத்தத்தை உற்று கவனித்தல் வேண்டும். அவர் கட்டளைக்கு உடனடியாக நம்மில் இருக்கும் எல்லா சக்திகளும் கிரியை செய்தல் வேண்டும். நம்முடைய பாதுகாப்பு, நம்முடைய சந்தோஷங்கள், நம்மில் உள்ள சிறந்த நற்பண்புகள், பிறரிடத்தில் அன்பும் நன்றியும் உடையவராக இருப்பதும் அவருடைய அறிவிலும் ஞானத்திலும் உடனடியாக கவனம் செலுத்தி அதில் வளர்வதும். எல்லாம் நாம் நமது ஆண்டவரிடத்தில் கொண்டிருக்கும் மிக பெரிதான பக்தியின் அடிப்படையில்தான் இவைகள் நிற்கின்றன. ஆகவே அவருடைய நாமத்திற்கு நாம் எந்த அளவு பக்தி விருத்தியை காட்ட வேண்டுமோ அதனை அடைவதற்குரிய வழிகளை விருத்தி செய்வதற்கு நமதாண்டவர் ஆதரவு காட்டி வருகிறார்.

**- Z ’96, 155 (R 2002).**

ஞானத்தினுள் அடங்கியிருப்பது அறிவு. அத்துடன் நல்ல நோக்கங்களை செயல் முறையில் நடத்திக் காட்டுவதற்குரிய அறிவையும் ஞானம் தன்னகத்தே கொண்டது. ஒரு மனிதனுக்கு இருக்க வேண்டிய மிக உன்னதமானதும் உயர்ந்ததுமான காரியம் என்னவென்றால் அவன் தன் அயலகத்தாருடனும் ஆண்டவர் பேரிலும் கொண்டிருக்கும் தகுந்த உறவு முறையே. ஆகவே கர்த்தருக்கு பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம் என்பது எத்தனை தெளிவாக இருக்கிறது. ஏனெனில் இது தான் தேவனிடத்திலும் அயலகத்தானிடத்திலும் ஏற்ற உறவு முறைகளை ஏற்படுத்திக் கொள்ள உதவுகிறது. நாம் தேவனின் சத்தத்தையும் அறிகிறோம்.

**-P ’35, 183.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

உபா 4:6; 5:29; 6:2; 10:12; யோபு 28:28; சங் 111:1-9; 25:8-14; நீதி 1:7-9, 21-23; 2:1-11; பிர 8:12; செப் 3:7; மல் 3:16; மத் 11:25-30; லூக் 1:49,50; யோவா 14:15-17; அப் 10:35.

**கோபுர வாசிப்பு :** Z ’06, 299 (R 3861).

**வினாக்கள் :** இந்த வாரத்தில் நான் கர்த்தரிடம் பயபக்தியாயிருந்தேனா? அதில் உதவியாக அல்லது இடையூறாக இருந்தது என்ன? அந்த அனுபத்திலிருந்து நான் நன்மையடைந்தேனா?